**மே – 09**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசானது, ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 319 ரூபாயாக இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) பயனாளிகளுக்கான ஊதிய விகிதத்தினை 336 ரூபாயாக உயர்த்தி நிர்ணயித்துள்ளது.
- தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையம் ஆனது, சுமார் 120 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு இடம் விட்டு இடம் நகர்த்தக் கூடிய பளுத் தூக்கிகள் மூலம் மொத்தச் சரக்கு கையாளுதலை மேம்படுத்தியதன் மூலம் மற்றொரு முக்கியமான மைல்கல்லை எட்டி உள்ளது.
- அமெரிக்காவின் பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் வாரியமானது, 2026 ஆம் ஆண்டின் இறுதியில் வாரன் பஃபெட்டிற்கு அடுத்தப்படியாக கிரெக் ஏபலை அதன் அடுத்த தலைமை நிர்வாக அதிகாரியாக அதிகாரப்பூர்வமாக நியமித்துள்ளது.
- மொழியின் மொழியியல் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தையும் 265 மில்லியனுக்கும் அதிகமான போர்த்துக்கீசிய மொழி பேசுபவர்களையும் கௌரவிக்கும் வகையில் மே 05 ஆம் தேதியானது உலகப் போர்த்துகீசிய மொழி தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் மே 06 ஆம் தேதியன்று உடல் குறித்த ஒரு நேர்மறை எண்ணங்களை ஊக்குவிப்பதற்காகவும், சுய ஏற்பினை மிக ஊக்குவிப்பதற்காகவும், உடல் மெலிந்த நிலை மீதான அதீத சமூகப் பிரமைக்கு எதிராக சவால் விடுப்பதற்காகவும் சர்வதேச உணவுக் கட்டுப்பாடு இல்லாத தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய கடலோரக் காவல்படையானது, கடல்சார் களத்தில் தேடல் மற்றும் மீட்பு மீதான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக சென்னையில் 'SAREX -22' எனும் தேசியக் கடல்சார் தேடல் மற்றும் மீட்புப் பயிற்சியை நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், சென்னை விமான நிலையப் பயணிகள் போக்குவரத்து வெறும் 7.2% உயர்வுடன், பயணிகள் போக்குவரத்தில் ஆறாவது இடத்திற்குச் சரிந்தது.
    - டெல்லி, மும்பை, பெங்களூரு, ஐதராபாத் மற்றும் கொல்கத்தா விமான நிலையங்கள் இந்தப் பட்டியலில் முன்னிலையில் இருந்தன.
- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர், கொல்கத்தாவின் நியூ டவுன் நகரில் 'கார்ப்பரேட் பவன்' எனும் அலுவலகத்தினைத் திறந்து வைத்துள்ளார்.
    - முதலாவது 'பிரதமர் பயிற்சித் திட்ட (PMIS) அணுகல் மையம்' ஆனது இந்த கார்ப்பரேட் பவனில் அமைந்துள்ளது.
- இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆகியவை இணைந்து பல்வேறு சமிஞ்ஞை உணர்வு அம்சங்களைக் கொண்ட கடல் பரப்பு கண்ணி வெடி நுட்பத்தின் (MIGM) சரிபார்ப்புச் சோதனையை மிக வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.
    - MIGM என்பது அதிகரித்து வரும் நவீன கால ரேடார் கருவிக்குப் புலப்படாத கப்பல்களின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக என்று DRDO அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு அதிநவீன கடல் சார் பயன்பாட்டுக் கண்ணி வெடியாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வி.சி.க. - அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சி

- விடுதலைச் சிறுத்தைகள் கட்சியானது, இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அந்தக் கட்சியானது தற்போது நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் இரண்டு

பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

- தமிழ்நாட்டின் 73 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில், ஒரு தலித் சமூக நபர் நிறுவிய அரசியல் கட்சிக்கு இது போன்ற அங்கீகாரம் கிடைத்ததில்லை.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கட்சி கோரிய படி, தமிழ்நாட்டில் 'பானை' சின்னம் ஆனது VCK கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.




## வர்த்தகர்களுக்கான நலத்திட்டங்கள் 2025





- மே 05 ஆம் தேதியை வணிகர் தினமாக அறிவிக்கும் அரசாணையை மாநில அரசானது விரைவில் வெளியிட உள்ளது.
- தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் நிரந்தர உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி 3 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
- 500 சதுர அடிக்குக் குறைவான இடங்களில் இயங்கும் உணவு விற்பனை தொடர்பான வணிகங்களுக்கு சுய மதிப்பீட்டு முறை மூலம் அனுமதி வழங்கப்படும்.

- சென்னை மாநகராட்சி மற்றும் பிற நகரப் பஞ்சாயத்துகளில் (பேரூராட்சி) வணிக நிறுவனங்களுக்கான குறை தீர்க்கும் குழு அமைக்கப்படும்.
- வணிக நிறுவனங்கள் ஆனது, 24 மணி நேரமும் செயல்படுவதற்கு அனுமதிக்கும் ஒரு அரசாணையானது மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## திறன்பேசிகள் மற்றும் வரைப்பட்டிகைகளுக்கான 'பழுதுபார்ப்புத் தன்மை குறியீடு'

- கைபேசி மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் துறையில் பழுதுபார்ப்புத் தன்மை குறியீடு (RI) சார் கட்டமைப்பிற்காக என அமைக்கப்பட்ட குழுவானது அதன் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.
- அசல் உபகரண உற்பத்தியாளர்கள் (OEM) கூடுதல் இணக்க நெருக்கடிகள் இல்லாமல் கட்டமைப்பில் வழங்கப்பட்ட தரநிலை மதிப்பெண் அளவுருக்களின் அடிப்படையில் பழுதுபார்ப்புத்தன்மைக் குறியீடு குறித்த சுயச் சான்றினை வழங்க வேண்டும்.
- இனி பழுதுபார்ப்புத் தன்மை குறியீடு ஆனது விற்பனை செய்யும் / வாங்கும் இடத்தில், இணைய வழி வணிக தளங்களில் மற்றும் தொகுக்கப்பட்டத் தயாரிப்புகளில் QR குறியீடு வடிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- இந்தக் குறியீடானது, நுகர்வோர் 'தேவையற்ற நுகர்விற்குப்' பதிலாக தங்களுக்கானத் தயாரிப்புகளை 'கவனத்துடன் பயன்படுத்துதல்' என்ற ஒரு நெறிமுறையுடன் ஒன்றும் விருப்பத் தேர்வுகளைத் தேர்வு செய்ய உதவுகிறது.





## இந்தியாவில் ஆரஞ்சு பொருளாதாரம்


- 2025 ஆம் ஆண்டு WAVES நிகழ்வில் இசை, திரைப்படங்கள், உணவு, விளையாட்டு மற்றும் இயங்குபடம் ஆகியவற்றை உள்ளடக்கியப் படைப்பாக்கம் சார்ந்தப் பெரும் பொருளாதாரமான இந்தியாவின் ஆரஞ்சு பொருளாதாரத்தின் எழுச்சியைப் பிரதமர் அங்கீகரித்துள்ளார்.
- 'ஆரஞ்சு பொருளாதாரம்' ஆனது படைப்பாக்கம் சார்ந்த ஒரு பொருளாதாரம் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது செல்வ வளத்தினையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதற்காக வேண்டி படைப்பாற்றல், கலாச்சாரம் மற்றும் அறிவுசார் சொத்துக்களைப் பயன்படுத்தும்

பொருளாதார நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

- ❖ இந்தியாவின் பொழுதுபோக்குத் துறையின் தற்போதைய மதிப்பீடானது 28 மில்லியன் டாலர் ஆகும்.
- ❖ இந்தியாவின் படைப்பாக்கம் சார்ந்தப் பொருளாதாரம் ஆனது, 18% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## பல்லுயிர்ப்பெருக்கங்களின் பலன் பகிர்வு விதிமுறைகள் 2025





- ❖ உயிரியல் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் பலன்களைப் பகிர்வதை மேலாண்மை செய்வதற்காக தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் ஆனது ஒரு புதிய விதிகளை வெளியிட்டுள்ளது.
- ❖ இது 2025 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத்தன்மை (உயிரியல் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் மற்றும் அதன் பலன்களின் நியாயமான மற்றும்

சமமானப் பகிர்வு) ஒழுங்குமுறை விதிகள் என அழைக்கப்படுகிறது.

- ❖ இந்த விதிகளானது, எண்ணிம வரிசைத் தகவல்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய தகவல்கள் உட்பட உயிரியல் வளங்களைப் பயன்படுத்துவதற்கான பலன்களைப் பகிர்வதற்கு தற்போது வழிகாட்டும்.
- ❖ 5 கோடி ரூபாய் வரையிலான வருடாந்திர வருவாய் உள்ள பயனர்கள் பலன்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை.
- ❖ 5 கோடி ரூபாய் முதல் 50 கோடி ரூபாய் வரையில் வருவாய் உள்ளவர்கள் உற்பத்தியின் வருடாந்திர மொத்தத் தொழிற்சாலை கிடங்கு சார் விற்பனை விலையில் சுமார் 0.2 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் (அரசு வரிகளைத் தவிர்த்து).
- ❖ மீதமுள்ள இரண்டு வரம்புகள், முறையே 50 முதல் 250 கோடி ரூபாய் வரையிலும், 250 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட வருவாயில் முறையே 0.4 சதவீதம் மற்றும் 0.6 சதவீதம் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.
- ❖ ஆண்டிற்கு 1 கோடி ரூபாய்க்கு மேலான வருவாய் ஈட்டும் அனைத்து பயனர்களும், ஓராண்டில் பயன்படுத்தப்படும் வளங்கள் குறித்த ஒரு தகவலுடன் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ இவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகையில், சுமார் 10-15 சதவீதம் ஆனது தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திடம் வைக்கப்படும்.

## ஒருங்கிணைந்த ECINET செயலி





- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, ஆணையத்தின் தற்போது உள்ள 40 கைபேசி மற்றும் வலை தளச் செயலிகளை ஒருங்கிணைப்பதற்காக ECINET எனப்படும் ஒற்றை தள எண்ணிமத் தளத்தை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ இந்தத் தளமானது வாக்காளர்கள், தேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சிகள் மற்றும் குடிமைச் சமூகத்திற்கு தடையற்ற மற்றும் பயனர்களுக்கு உகந்த ஒரு இடைமுகத்தை வழங்கும்.
- ❖ இது வாக்காளர் உதவி எண், வாக்காளர் வாக்குப் பதிவு, cVIGIL, சுவிதா 2.0, ESMS, சாக்சம் மற்றும் KYC செயலி போன்ற செயலிகளை ஒருங்கிணைக்கும்.
- ❖ ECINET ஆனது நாடு முழுவதும் உள்ள சுமார் 100 கோடி வாக்காளர்களுக்கும் மற்றும் 10.5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அரசு அதிகாரிகள் (BLO), அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட சுமார் 15 லட்சம் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA),

சுமார் 45 லட்சம் வாக்குச்சாவடி அதிகாரிகள், 15,597 உதவி தேர்தல் பதிவு அதிகாரிகள் (AERO), 4,123 தேர்தல் பதிவு அதிகாரிகள் (ERO) மற்றும் 767 மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (DEO) அடங்கிய முழு தேர்தல் கட்டமைப்பிற்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நுண்ணீர்ப்பு விசை மற்றும் மனித உடல் வெப்பச் சீராக்கம்




- "திரவ மாற்றங்கள் வெப்பச் சமநிலையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதால் நுண்ணீர்ப்பு விசையானது தொடர்ந்து உடல் வெப்பநிலையை அதிகரிக்கிறது" என்று புதிய ஆய்வு தெரிவிக்கிறது.
- மனித உடல்கள் வயது, உடலின் கட்டுக்கோப்பு நிலை மற்றும் உடலில் உள்ள கொழுப்பு போன்ற பிற அளவுருக்களின் அடிப்படையில் வெப்பநிலை மாற்றங்களுக்கு வெவ்வேறு விதமாக செயலாற்றுகின்றன.
- விண்வெளி போன்ற ஈர்ப்பு விசை அற்ற சூழல்களில், மனித உடல் மிக கணிசமான மாறுதல்களுக்கு உள்ளாகிறது என்பதால் அது எலும்புகள், தசைகள், இதயம், நோய் எதிர்ப்பு அமைப்பு, வளர்சிதை மாற்றம் என்பதோடு மட்டுமல்லாமல் தனிப்பட்டச் செல்களை கூட பாதிக்கிறது.
- குறிப்பாக, உடல் ஆனது அதிக நேரம் நுண் ஈர்ப்பு விசைக்கு உட்படுவதால் கால்கள் மற்றும் கைகள் குளிர்கின்றன அதே சமயம் தலை, வயிறு மற்றும் அடிவயிற்றுப் பகுதி வெப்பமடைகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.
- நுண் ஈர்ப்பு விசையின் தாக்கத்தின் கீழ் 2.5 மாதங்களில் உடலின் மைய வெப்பநிலை 36.3 டிகிரி செல்சியசிலிருந்து 37.8°C ஆக அதிகரிக்கலாம் (30% குறைவான வியர்வை மற்றும் 36% அதிக வளர்சிதை மாற்றத்துடன்).

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மனித மேம்பாட்டுக் குறியீடு 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான மனித மேம்பாட்டு அறிக்கை "A Matter of Choice: People and Possibilities in the Age of AI" என்று தலைப்பிடப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு ஐநா மேம்பாடுத் திட்ட அமைப்பின் மனித மேம்பாட்டுக் குறியீட்டில்

மதிப்பிடப்பட்ட 193 நாடுகளில் இந்தியா 130வது இடத்தைப் பிடித்தது.

- இது முந்தைய ஆண்டில் இருந்த 133வது இடத்திலிருந்து 3 இடங்கள் முன்னேறியதைக் குறிக்கிறது.
- 0.685 என்ற HDI மதிப்புடன், இந்தியா "நடுத்தர மனித மேம்பாட்டுப் பிரிவில்" உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் சுமார் 71.7 ஆண்டுகளாக இருந்த இந்தியாவின் பிறப்பின் போது எதிர்பார்க்கப் படும் ஆயுட்காலமானது, 2023 ஆம் ஆண்டில் 72 ஆண்டுகளாக உயர்ந்து, தரவரிசையில் முன்னேற்றத்திற்குப் பங்காற்றிய மற்ற காரணிகளுள் ஒன்றாகும்.
- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பள்ளிக் கல்வி ஆண்டுகள் சுமார் 13 ஆக மாறாமல் அப்படியே உள்ளன.
- முந்தைய ஆண்டில் 6.6 ஆக இருந்த சராசரி பள்ளிக் கல்வி ஆண்டுகள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 6.9 ஆக சற்று உயர்ந்தது.
- தனி நபர் மொத்தத் தேசிய வருமானம் ஆனது, 2022 ஆம் ஆண்டில் சுமார் 8475 டாலராக இருந்தது.
- பாலினச் சமத்துவமின்மையைக் குறைப்பதில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது என்பதுடன், பாலினச் சமத்துவமின்மைக் குறியீட்டில் (GII) மதிப்பிடப்பட்ட மொத்தம் 193 நாடுகளுள் 102வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 166 நாடுகளில் இந்தியாவானது 108வது இடத்தைப் பிடித்தது.
- சமத்துவமின்மையானது இந்தியாவின் HDI மதிப்பினை 30.7 சதவீதம் குறைப்பதால், இது பிராந்தியத்தில் மிக உயர்ந்த இழப்புகளில் ஒன்றாகும்.
- 'நடுத்தர மனித மேம்பாட்டுப்' பிரிவில் இந்தியாவுடன் இணைந்து வங்காளதேசம் 130வது இடத்திலும், நேபாளம் 145வது இடத்திலும், பூடான் 125வது இடத்திலும் உள்ளன.
- பாகிஸ்தானின் HDI மதிப்பெண்கள் ஆனது 164 என்ற மதிப்பிலிருந்து 168 ஆகவும், ஆப்கானிஸ்தான் ஒரு புள்ளி உயர்ந்து 181வது இடத்திலும் உள்ளது.

| | | | SDG 3 | SDG 4.3 | SDG 4.4 | SDG 8.5 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Human Development Index (HDI) | Life expectancy at birth | Expected years of schooling | Mean years of schooling | Gross national income (GNI) per capita | GNI per capita rank minus HDI rank | HDI rank |
| | | Value | (years) | (years) | (years) | (2021 PPP $) | | |
| HDI RANK | | 2023 | 2023 | 2023[a] | 2023[a] | 2023 | 2023[b] | 2022 |
| Very high human development | | | | | | | | |
| 1 | Iceland | 0.972 | 82.7 | 18.9[c] | 13.9[d] | 69,117 | 12 | 3 |
| 2 | Norway | 0.970 | 83.3 | 18.8[c] | 13.1[e] | 112,710[f] | 0 | 1 |
| 2 | Switzerland | 0.970 | 84.0 | 16.7 | 13.9[e] | 81,949[f] | 5 | 2 |
| 4 | Denmark | 0.962 | 81.9 | 18.7[c] | 13.0[e] | 76,008[f] | 4 | 4 |
| 5 | Germany | 0.959 | 81.4 | 17.3 | 14.3[e] | 64,053 | 13 | 6 |
| 5 | Sweden | 0.959 | 83.3 | 19.0[c] | 12.7[e] | 66,102 | 10 | 4 |
| 7 | Australia | 0.958 | 83.9 | 20.7[c] | 12.9 | 58,277 | 14 | 8 |
| 8 | Hong Kong, China (SAR) | 0.955 | 85.5[g] | 16.9 | 12.4 | 69,436 | 4 | 9 |
| 8 | Netherlands | 0.955 | 82.2 | 18.6[c] | 12.7[e] | 68,344 | 6 | 7 |
| 10 | Belgium | 0.951 | 82.1 | 19.0[c] | 12.7[e] | 63,582 | 9 | 13 |
| 11 | Ireland | 0.949 | 82.4 | 19.2[c] | 11.7[e] | 90,885[f] | -6 | 10 |
| 12 | Finland | 0.948 | 81.9 | 19.5[c] | 13.0[e] | 57,068 | 10 | 11 |
| 13 | Singapore | 0.946 | 83.7 | 16.7 | 12.0 | 111,239[f] | -10 | 14 |
| 13 | United Kingdom | 0.946 | 81.3 | 17.8 | 13.5 | 54,372 | 13 | 11 |
| 15 | United Arab Emirates | 0.940 | 82.9 | 15.6 | 13.0 | 71,142 | -4 | 23 |
| 16 | Canada | 0.939 | 82.6 | 15.9 | 13.9 | 54,688 | 9 | 16 |
| 17 | Liechtenstein | 0.938 | 83.6 | 15.4 | 12.4[h] | 166,812[f,i] | -16 | 15 |
| 17 | New Zealand | 0.938 | 82.1 | 19.3[c] | 12.9[e] | 47,260 | 17 | 17 |
| 17 | United States | 0.938 | 79.3 | 15.9 | 13.9 | 73,650 | -7 | 18 |

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புலிட்சர் பரிசு 2025

- பத்திரிகைத் துறையில் 15 பிரிவுகள் மற்றும் புத்தகங்கள், நாடகம், இசை போன்ற 8


பிரிவுகள் உட்பட மொத்தம் 23 பிரிவுகளில் புலிட்சர் பரிசுகளை வென்றவர்களின் பட்டியல் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன.

- ❖ ரியூட்டர்ஸ், ஏஜென்ஸ் பிரான்ஸ்-பிரஸ் மற்றும் தி நியூயார்க் டைம்ஸ் ஆகியவை இந்தப் பத்திரிகைத் துறையில் சிறந்து விளங்கியதற்காக இந்த விருதுகளை வென்றன.
- ❖ தி நியூயார்க் டைம்ஸ் இதழானது 4 பிரிவுகளில் நான்கு விருதுகளை வென்றது.
- ❖ 'ஃபென்டனைல் எக்ஸ்பிரஸ்' என்ற விரிவான ஒரு தொடருக்காக ரியூட்டர்ஸ் இதழுக்குப் புலனாய்வுக் கட்டுரைக்கான புலிட்சர் பரிசு வழங்கப்பட்டது.
- ❖ 'தி வாஷிங்டன் போஸ்ட் முன்னாள் தலையங்க கேளிக்கைச் சித்திர வடிவமைப்பாளர் ஆன் டெல்னேஸ், விளக்கப் படத்துடன் கூடிய கட்டுரை மற்றும் விளக்கவுரைப் பிரிவில் இந்த விருதினை வென்றார்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச சிறுத்தைப் புலிகள் தினம் 2025 - மே 03





- ❖ இது சிறுத்தைப் புலிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு மற்றும் அதன் வளங்காப்பு

பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சிறுத்தைப் புலிகள் என்பது வாழ்விடத்தைப் பொறுத்து அவற்றின் அளவு மற்றும் நிறம் மாறுகின்ற, அரிதான மற்றும் இரவு நேரத்தில் உலாவும் விலங்குகள் ஆகும்.
- அவை ஆசியா, ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள், தெற்கு ரஷ்யா மற்றும் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன.
- அவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடியவையாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தியாவில் காணப்படும் சிறுத்தைப் புலிகளின் எண்ணிக்கையானது 13,874 (வரம்பு: 12,616 – 15,132) என மதிப்பிடப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான (3907) சிறுத்தைப் புலிகள் உள்ளன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (1985), கர்நாடகா (1,879) மற்றும் தமிழ்நாடு (1,070) ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன.

## உலக ஆஸ்துமா தினம் 2025 - மே 06




- இத்தினமானது, இந்தப் பாதிப்பினால் ஏற்படும் பாதிப்பு நிலைகள் மற்றும் அபாயம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஆஸ்துமா என்பது ஒரு நபரின் காற்றுப்பாதைகள் வீங்கி, குறுகி, தடித்து, மிக அதிகப் படியான சளியை உருவாக்கி, சுவாசிப்பதைக் கடினமாக்குகின்ற நாள்பட்ட சுவாசக் கோளாறு ஆகும்.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 2019 ஆம் ஆண்டில் சுமார் 4.55 லட்சம் என்ற உயிரழப்பு எண்ணிக்கையுடன் உலகளவில் சுமார் 26.2 கோடி மக்கள் ஆஸ்துமாவால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இந்தியாவில் சுமார் 3.4 கோடிக்கும் அதிகமான மக்கள் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.
- இந்தியா உலகின் ஆஸ்துமா பாதிப்பில் 13% பங்கினை மட்டுமே கொண்டிருந்தாலும்,

உலகளாவிய ஆஸ்துமா உயிரிழப்புகளில் 42% பங்கினைக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Make Inhaled Treatments Accessible for ALL" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## மங்கார் பானி - தொல்பொருள் கண்டுபிடிப்புகள்

- தேசியத் தலைநகரப் பிராந்தியத்தின் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆரவல்லி மலைத் தொடரில் உள்ள மங்கார் பானி என்ற வனப் பகுதியில் மிகச் சமீபத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டெடுக்கப் பட்டு உள்ளன.
- இது பழைய கற்காலத்தில் வாழ்ந்த முற்கால மனிதரின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை வழங்குகிறது.
- இந்த முக்கிய அகழ்வாராய்ச்சியில் இறைச்சி வெட்டுதல், உரித்தல் மற்றும் கூர்மைப் படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இவை ஆரம்பகாலக் கற்காலச் சமூகங்களின் புதுப் புனைவுத் திறனை மிகவும் நன்கு வெளிப்படுத்துகின்றன.
- இந்தக் கருவிகளின் காலம் சுமார் 500,000 முதல் 200,000 ஆண்டுகள் வரை இருக்கலாம்.
- இந்த மங்கர் பானிப் பகுதியானது தேசியத் தலைநகரப் பிராந்தியத்தில் உள்ள மிகவும் புனிதமான தோப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.




Archaeologists conducted exploratory salvage surveys in Mangar Bani, surrounding hills of Mangar and the nearby Bandhwari Photos: Vinay Gupta

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★